# OS.No.28/2024, Dated 05.02.2026.

The witness sworn under Oaths Act 1969 on this the 05th day of February 2026.

**வா.சா.1 – பன்னீர்செல்வம் த/பெ சின்னப்ப கவுண்டர் வரவழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

வழக்கு சொத்துகள் ஆரம்பத்தில் மாணிக்க கவுண்டருக்கு உரிமையானது என்றால் சரிதான். மாணிக்க கவுண்டருக்கு கம்ச கவுண்டர் மற்றும் வலசை கவுண்டர் என்று இரு மகன்கள் என்றால் சரிதான். அவர்கள் இருவரும் ஒரு பதிவு செய்த ஒரு பதிவு செய்த பாகப்பிரிவினை ஆவணம் எழுதிக்கொண்டார்கள் என்றால் சரிதான். அவரவர்களுக்கு கிடைத்த சொத்தை அவர்கள் பட்டாவும் மாற்றிக்கொண்டார்கள் என்றால் சரிதான். 3 தனி தனி விற்பனை ஆவணங்கள் மூலமாக நான் சில சொத்துகளை வாங்கினேன் என்றால் சரிதான். வலச கவுண்டர் இறந்த பின்னிட்டு தான் வாங்கினேன் என்றால் சரிதான். வலச கவுண்டர் எப்போது இறந்தார் என்று எனக்கு தெரியாது. 27.08.1987 அன்று கம்ச கவுண்டர் மற்றும் அவரது வாரிசுகளிடம் வாங்கினேன் என்றால் சரிதான். மேற்படி சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியவில்லை. 1 ஏக்கர் 1 1/2 செண்டு வாங்கினேன். 27.07.1992 தேதியன்று வலசை கவுண்டரின் மனைவி மற்றும் மகன்களிடம் இருந்து வாங்கினேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் வலசை கவுண்டரின் வாரிசுகள் வசந்தி மற்றும் ரவி கையெழுத்து போடவில்லை என்றால் சரிதான். 1993 ஆம் ஆண்டு ரவியின் பாகத்தை சின்னப்ப கவுண்டருக்கு விற்றுவிட்டார். சின்னப்ப கவுண்டர் எனது தகப்பனார் ஆவார். ரவியின் பாகத்தை தான் எனது தந்தை வாங்கினார். அவருக்கு வசந்தி என்ற மகள் இருந்த விபரத்தை எனக்கு சொல்லவில்லை. ரவியிடம் வாங்கிய விபரத்தை வழக்கில் நான் சொல்லியுள்ளேன். அதற்கான ஆவணங்களை நான் தாக்கல் செய்துள்ளேன். வசந்தியும் ரவியும் தற்போது உள்ளார்கள். வசந்திக்கும் ரவிக்கும் அவர்களது பாகத்தை கேட்கும் உரிமை

உண்டு என்றால் இல்லை. 27.07.1992 ஆம் தேதி நான் என்னென்ன சொத்துகள் வாங்கினேன் என்றால் 66 செண்டு வாங்கினேன். சர்வே எண் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. 03.12.1993 ல் 1ம் பிரதிவாதியிடம் இருந்து நான் வாங்கினேன் என்றால் சரிதான். நான் 30 செண்டு வாங்கினேன். சர்வே எண் எனக்கு தெரியவில்லை. எனது தகப்பனாரின் பெயரில் மேற்கண்ட சொத்துகளில் பட்டா மாற்றம் செய்யப்பட்டது. அதற்கான வருவாய் ஆவணங்கள் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் வருவாய்துறை ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொத்துகளை வாங்கி சுமார் 35 வருடங்களுக்கு மேல் ஆகியிருக்கிறது என்றால் சரிதான். இந்த 35 ஆண்டுகளுக்கான வருவாய்துறை ஆவணங்கள் மற்றும் வரி ரசீதுகளை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் ஓட்டகோவிலில் வசிக்கிறேன் என்றால் சரிதான். பிரதிவாதிகள் கீழ்சீசமங்கலத்தில் வசிக்கிறார்கள் என்றால் சரிதான். இரண்டு ஊருக்கும் இடையே 2 அல்லது 3 கி.மி தூரம் இருக்கும். வழக்கு சொத்துகள் அனைத்தும் இன்றைய தேதி வரை 2ம் பிரதிவாதி சேகர் அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல. 12.12.2012 அன்று சென்னையை சேர்ந்த சண்முகம் என்பவருக்கு சில சொத்துகளை விற்பனை செய்தேன் என்றால் சரிதான். அந்த சொத்துகளை இந்த வழக்கில் காண்பித்துள்ளேனா என்றால் காண்பித்துள்ளேன். அவரது வாரிசுகள் சென்னையில் தான் உள்ளார்கள். அவர்களும் அந்த சொத்துகளை விற்றுவிட்டார்கள். யாருக்கு விற்றார்கள் என்று எனக்கு தெரியாது. மாணிக்க கவுண்டர் உயிருடன் இருக்கும்போதே தனது மகன்களுக்கு வாய்மொழி பாகப்பிரிவினை செய்துகொடுத்தார் என்று தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அவர் இறந்த பின்னிட்டு தான் 01.05.1969 ல் பாகப்பிரிவினை ஆவணம் ஏற்படுத்திக்கொண்டார்கள் என்றால் எனக்கு அது தெரியாது. கம்ச கவுண்டர் 27.08.1987 ல் எனது தந்தைக்கு விற்பனை செய்த ஆவணத்தில்

01.05.1969 ல் அவருக்கு பாகமாக கிடைத்த அனைத்து சொத்துகளையும் விற்பனை செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

SARANYA S

Digitally signed by SARANYA S
Date: 2026.02.05 18:31:27 +0530

சார்புநீதிபதி
வந்தவாசி